## 15வது தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் – 2016

# மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க ஜனநாயகப் போராட்டங்களை வலுப்படுத்த

# எஸ்யுசிஜ (கம்யூனிஸ்ட்) வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வீர்!

# பாட்டாளி சிந்தனை

சிறப்பிதழ்

Volume 26 No. 8 சோசலிஸ்ட் யூனிட்டி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

April 2016 தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி sçé Ô 5

# மக்களுக்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் அறைகூவல்

*தமிழ்நாட்டின் அரசியல்களம் தேர்தலினால் கோடை வெப்பத்தையும் விஞ்சும் அளவிற்கு சூடு பிடித்துள்ளது. ஊரறிந்த கட்சிகளின் தலைவர்கள் பதவிக் காய்ச்சலின் உச்சத்தில், இரவு பகலாக, ஊடகங்களிலும், பேட்டிகளிலும், கூட்டங்களிலும் பிதற்றிக் கொண்டிருக்கின்றனர். கூட்டணிகள் தோன்றுவது, உடைவது, அணிமாறுவது, கட்சிமாறுவது போன்றவை கொடிகட்டிப் பறக்கின்றன.*

*ஆனால் வறுமை, பசி, பட்டினி, நோய், வேலையின்மை, விலைவாசி உயர்வு, சுகாதாரக்கேடுகள், குடிநீர் பஞ்சம் முதலிய பிரச்சினைகள் என்று தீரும், விடிவு காலம் எப்போது வரும் என்று பொதுமக்கள் ஏக்கப்பெருமூச்சுடன் விம்மிக்கொண்டிருக்கின்றனர். 2016 சட்டமன்றத் தேர்தலில் அமையவிருக்கும் ஆட்சி மூலம் தங்கள் இன்னல்கள் கொஞ்சமாவது குறையாதா என்ற எதிர்பார்ப்பும் அவர்கள் உள்ளத்தின் ஓரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கின்றது.*

## தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றுச் சுருக்கம்

*விடுதலைப் போராட்ட காலத்துக்குப் பின்னர் மத்தியிலும், மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சி அதிகாரத்தில் அமர்ந்தது. மக்களிடம் நிலவிய சுதந்திரப் போராட்ட உணர்வுகளின் நிர்ப்பந்தத்தால் சில மக்கள் நலக்கூறுகளைக் கொண்டிருந்த அடித்தளக்கட்டமைப்பு, திட்டங்கள், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இருந்தபோதிலும் அவையாவும் மக்களைப் பொறுத்தமட்டில் புல்லுக்குப் புசிந்த நீராகவே போனது. தனி உடைமையாளர்களின் லாபப் பயிரே மேன்மேலும் கொழுத்து வளர்ந்தது. முதலாளித்துவ சமூக–பொருளாதாரக் கட்டமைப்பு வெகு வேகமாகவும் பலமாகவும் கட்டியமைக்கப்பட்டது. சட்டங்களும் திட்டங்களும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாறாக முதலாளித்துவச் சந்தையை மேலும் மத்தியத்துவப்படுத்தி விரிவுபடுத்துவதற்கே பயன்படுத்தப்பட்டன.*

*விலைவாசி உயர்வு, அரிசிப் பஞ்சம், பட்டினி ஆகியவை அதிகரித்தன. மக்களிடம் தோன்றிய அதிருப்தி எதிர்ப்பாக*

மாறத்துவங்கியது. அவ்வேளையில், மத்தியில் ஆண்ட காங்கிரஸ் கட்சி இந்தியைத் திணிக்கும் மொழிக்கொள்கையை கொண்டுவந்தது. இதற்கு எதிராக மக்களும் குறிப்பாக மாணவர்களும் போராடினர். இப்போராட்டத்தையும், அதன் மீது மாநில காங்கிரஸ் அரசாங்கம் ஏவிவிட்ட அடக்குமுறைகளையும் பயன்படுத்தி 67ல் திமுக தேர்தல் கூட்டணி அமைத்து வெற்றிபெற்று தனிப் பெரும்பான்மையுடன் தமிழகத்தின் ஆட்சி பீடத்தில் அமர்ந்தது. ஆனால் காங்கிரஸ் பின்பற்றிய அதே பொருளாதாரக் கொள்கைகளையே திமுகவும் பின்பற்றியது. ஏற்கனவே இருந்து வந்த பிரச்சினைகள் தீரவில்லை என்பதோடு, முன்பே அவ்வப்போது தலைதூக்கிக் கொண்டிருந்த ஊழல், திமுக ஆட்சி காலத்தில் பெரும் பூதாகர வடிவமெடுத்தது.

திமுக கட்சியின் பொருளாளராக இருந்த திரு எம்ஜிஆர் பல அரசியல் காரணங்களுடன் உட்கட்சிக் கணக்கைக் கேட்டார் என்ற காரணத்தால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். அவர் தனது ஆதரவாளர் களுடன் அதிமுக என்ற புதிய கட்சியை உருவாக்கி திமுகவின் ஊழலுக்கு எதிரான குரலை உயர்த்தினார். ஊழல், அடக்குமுறை, விலைவாசி காரணங்களால் கோபமுற்றிருந்த மக்கள் அடுத்த தேர்தலில் அதிமுகவை பெரும்பான்மையுடன் ஆட்சியிலமர்த்தினர். அதிமுக அரசாங்கமும் முந்தைய திமுக, காங்கிரஸ் அரசாங்கங்கள் போலவே முதலாளித்துவக் கொள்கைகளையே நடைமுறைப் படுத்தியது. ஊழல்கள் முன்பு போலவே அதிமுக ஆட்சியிலும் தொடர்ந்து கொண்டேதானிருந்தது.

காங்கிரஸ், சிபிஐ, சிபிஐ(எம்), பாமக, மதிமுக, விடுதலைச் சிறுத்தைகள், தேமுதிக, முஸ்லீம் லீக், ஃபார்வர்ட் பிளாக் ஆகிய கட்சிகளுடன் அவ்வப்போது கூட்டணி வைத்துக்கொண்டு திமுகவும் அதிமுகவும் தொடர்ந்து மாறிமாறி ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்தன. வறுமை வேலையின்மை கல்வித் தரத்தில் வீழ்ச்சி, புரையோடிவிட்ட ஊழல், ஜனநாயக உரிமைகள் மீது தாக்குதல்கள் இவைதான் மக்கள் கண்ட பலன்களாகும்.

## கடந்த 5 ஆண்டுகால அதிமுக ஆட்சி – ஒரு பார்வை

2011–2016க்குட்பட்ட ஐந்தாண்டுகால அதிமுக ஆட்சியை எடுத்துக் கொள்வோம். மின் கட்டணமும் பால் விலையும் கடுமையாக உயர்த்தப்பட்டன. பேருந்து கட்டணம் இரண்டு மடங்காக உயர்த்தப் பட்டது. பெட்ரோல்–டீசல் விலை உயர்வே கட்டண உயர்வுக்கு காரணமாகச் சொல்லப்பட்டது. கடந்த ஓராண்டு காலமாகவே பெட்ரோல்–டீசல் விலை சர்வதேசச் சந்தையில் கிட்டத்தட்ட

நான்கில் ஒரு பங்காகக் குறைந்துவிட்ட நிலையில் பேருந்து கட்டணத்தை குறைத்திட அரசாங்கம் தயாராக இல்லை என்பதிலேயே அரசாங்கத்தின் மக்கள் விரோதத்தன்மை பளிச்சிடுகிறது. அது மட்டுமின்றி சாதாரண பேருந்துகளின் எண்ணிக்கை கால் பங்காகக் குறைக்கப்பட்டுவிட்டது. சாதாரண பேருந்துகளில் 'டீலக்ஸ்' 'எக்ஸ்பிரஸ்' பலகையை மாட்டிக்கொண்டு கூடுதல் கட்டணம் வசூலிக்கும் புதிய உத்திகளால் மக்கள் பெருஞ்சுரண்டலுக்கு ஆளாகின்றனர்.

அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, எண்ணெய், மளிகைப் பொருட்கள், இறைச்சி, முட்டை, காய்கறி, பழங்கள் ஆகியவற்றின் விலையேற்றத்தின் சுமை தாங்கமுடியாமல் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். சிறிய நகரங்களில்கூட இட்லி ரூ10, தோசை ரூ40–50, டீ ரூ7–15, சாப்பாடு ரூ70–95 என சாதாரண ஹோட்டல்களில் விற்கப்படுகின்றது. உணவின் விலைகளை கட்டுக்குள் வைத்திருக்கவேண்டிய அரசாங்கம், அப்பொறுப்பினை தட்டிக்கழித்து 'அம்மா உணவகம்' என்ற பெயரில் மாநகரங்களில் மட்டும் சில பகுதிகளில் சிலருக்கு குறைந்த விலையில் உணவுப் பொருட்களை வழங்கிவிட்டு மற்றெல்லோரையும் ஹோட்டல் முதலாளிகள் சுரண்டிக்கொழுக்க வழிவகுத்தது.

## தற்கொலைப்பாதையில் விவசாயிகள்

முன்னர் விவசாயம் சார்ந்த தொழில்களில் மாநிலத்தில் 80% மக்கள் ஈடுபட்டிருந்தனர். ஆனால் இன்று 50%மாக குறைந்துவிட்டனர். விவசாயத்திற்குத் தேவையான விதை, உரம், பூச்சிக்கொல்லிகள் போன்றவைகளை அநியாய விலை கொடுத்து வாங்கி குடும்பத்தினரின் முழு உழைப்பைச் செலுத்தியும் விளைபொருட்களான நெல், கரும்பு தானியங்கள், காய்கறி பழங்கள் ஆகியவற்றிற்கு கட்டுபடியாகும் விலை கிடைப்பதில்லை. பல ஆண்டுகளாக கரும்பாலை அதிபர்கள் விவசாயிகளுக்கு பணப்பட்டுவாடா செய்யவில்லை. அரசு–கூட்டுறவு வங்கிகள் கடனை முழுதும் திருப்பிச் செலுத்தாதோர் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கின்றது. கடன் வாங்கி கடைசி நிலுவைத் தொகையைக் கட்டமுடியாமல் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர். தஞ்சை விவசாயி பாலன் தனியார் வங்கியில் கடன் பெற்று டிராக்டர் வாங்கினார். இறுதித் தவணையை கட்டச் சொல்லி அந்நிறுவனம் மிரட்டியது. சற்றும் தொடர்பற்ற தமிழக காவல்துறை அந்த நிறுவனத்திற்கு துணையாக பாலனை அடித்து உதைத்த காட்சி தமிழக விவசாயிகளுக்கு மாபெரும் அதிர்ச்சியைத்

தந்தது. ஆனால் 9000 கோடி வங்கிக் கடனை கட்ட மறுக்கும் விஜய் மல்லய்யா உல்லாசமாக லண்டனில் உலவிக்கொண்டிருக்கிறார். சிறப்புப் பொருளாதார மண்டலம், சாலைகளை விரிவாக்குதல் என்ற பெயர்களில் பாரம்பரிய விளைநிலங்கள் பறிக்கப்படுகின்றன. கெயில் (GAIL) எண்ணெய்க் குழாய்கள் பதிக்க நிலத்தை அபகரிக்கும் முயற்சியும் நடக்கின்றது.

விவசாயத்திற்கான நீர்ப்பாசனத்தை மேம்படுத்த ஏரி குளங்கள் தூர்வாரப்பட வேண்டும். ஆறுகளில் வரம்பின்றி நடைபெறும் மணற்கொள்ளையைத் தடுத்திட வேண்டும். இடுபொருட்களை மானிய விலையில் அரசு வழங்கி விளை பொருட்களை கட்டுப்படியாகும் விலைக்கு கொள்முதல் செய்ய வேண்டும், பயிர்கள் வறட்சி, வெள்ளம், நோய்களின் பாதிப்புக்குள்ளாகும் போது நிவாரணம் வழங்க வேண்டும். வயது முதிர்ந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டும் போன்றவையே விவசாயிகளின் கோரிக்கைகளாகும்.

விளை பொருட்கள் மொத்தத்தையும் அரசே கொள்முதல் செய்ய வேண்டும், பொதுமக்களுக்கும் சில்லரை வியாபாரிகளுக்கும் நேரடியாக விநியோகிக்க வேண்டும், அதாவது இவற்றை அரசு வர்த்தகத்தின் (State Trading) கீழ் கொண்டுவர வேண்டும் என எமது கட்சியின் அகில இந்திய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் (AIKKMS) வலியுறுத்தி வருகின்றது. இதன் மூலம் மட்டுமே விவசாயிகளுக்கு நல்ல விலையையும் நுகர்வோருக்கு குறைந்த விலையையும் உறுதி செய்ய முடியும்.

## தொழில் வளர்ச்சியில் சுணக்கம்

1991ல் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட புதிய பொருளாதார உலகமயக் கொள்கை அனைத்துப் பிரச்சினைகளைத் தீர்க்கவல்ல சஞ்சீவி மருந்தாக முன்வைக்கப்பட்டது. அதனைப் பின்பற்றி சென்னை–ஸ்ரீபெரும்புதூர், தாம்பரம் மெப்ஸ் என பல இடங்களிலும் முதலாளிகள் லாபக்காற்றை நன்றாக நுகர்வதற்காக தொழிற்பூங்காக்கள் அமைக்கப்பட்டன. ஏராளமான சலுகைகளை மானியங்களை மக்கள் வரிப்பணத்தில் பெற்ற நிறுவனங்கள் சில ஆண்டுகளில் ஆட்குறைப்பு, ஆலைமூடல் ஆகிய நடவடிக்கைகளில் தீவிரம் காட்டின.

ஃபாக்ஸ்கான், நோக்கியா போன்ற பன்னாட்டுக் கம்பெனிகள் மூடப்பட்டு பல்லாயிரம் இளம் தொழிலாளர்கள் வேலையிழந்தனர்.

அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதாகக்கூறி மக்கள் வரிப்பணத்தில் சுமார் **200** கோடி செலவில் சமீபத்தில் ஓர் மாநாடு (Global Investors Meet) கூட்டப்பட்டது. அதற்குப் பின்னரும் முதலீடு வரவில்லை.

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று வருணிக்கப்பட்ட தொழில் நகரமான கோவையில் தொழில் நிறுவனங்கள் நலிவுற்றுள்ளன. உதிரி பாகம், நூற்பு, நெசவு தொழிலாளர்கள் வேலையிழப்பது அன்றாட நிகழ்வாகிவிட்டது. திருப்பூர், கோவை ஈரோடு மாவட்ட நெசவுத்தொழிலாளர்கள் கூலி வேலை கேட்டும் மானியத்தில் நூல் வழங்கக்கோரியும் போராடிவருகின்றனர். கைத்தறித்தொழிலும் கிட்டத்தட்ட நசிந்துவிட்டது. அத்தொழிலாளர்கள் வேறு மாற்று வேலை வாய்ப்பின்றி தமிழ்நாட்டின் பல நகரங்களிலும் நொந்து நைந்து கொண்டிருக்கின்றனர்.

## விற்பனையாகும் கல்வி, சிறைச்சாலைகளாகும் கல்லூரிகள்

தமிழ்நாட்டின் கல்வித்துறை முன்பு ஒரு காலத்தில் தரத்திலும், அரசு உதவிபெறும் பள்ளிகள், கல்லூரிகள் மூலம் கல்வியை பரவலாக்கு வதிலும் முன்னோடியாக இருந்தது. இன்றோ தனியார்மயக் கொள்கையால் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்விக்கூடங்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப் படுகின்றன. காங்கிரஸ் மத்திய அரசாங் கத்தால் **1986**ல் கொண்டு வரப்பட்ட மக்கள் விரோத, புதிய கல்விக் கொள்கையைப் பின்பற்றி அதிமுக, திமுக அரசாங்கங்கள் கல்வியை தனியார் லாப வேட்டைக்குத் திறந்துவிட்டன. கல்வியானது மக்களின் வாங்கும் சக்திக்கேற்ப பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளும் கடைச்சரக்காக சீரழிந்துவிட்டது.

பள்ளிகளில் மாணவர்கள் கல்வி பயின்றதை உறுதிசெய்யும் பாஸ்–பெயில் அடிப்படையிலான தேர்ச்சிக்குப் பதிலாக ஆல்–பாஸ் முறையில் 8ஆம் வகுப்புவரை அனைவரும் தேர்ச்சிபெறுகின்றனர். இதனால் அரசுப்பள்ளிகளில் பயிலும் ஏழைக் குடும்பத்து மாணவர்கள் சாதாரண வார்த்தைகளைக்கூட பிழையின்றி எழுத முடியாதவர்களாகவும், ஒற்றை இலக்க கூட்டல் கழித்தல் கணிதம் கூடத் தெரியாதவர்களாகவும் இருக்கின்றனர் என்பதை அரசாங்கத்தின் அறிக்கைகளே சுட்டிக்காட்டியுள்ளன. இவ்வாறாக, கண்ணெனத்தக வேண்டிய எண்ணையும் எழுத்தையும் முகத்திரண்டின் புண்ணென மாற்றிவிட்டர்கள்.

அரசாங்கப் பல்கலைக்கழகங்கள் துணைவேந்தர், பேராசிரியர் பணியிடங்கள் ஆண்டுக்கணக்கில் காலியாக இருக்கின்றன. விரிவுரையாளர் பதவிகள் பல இலட்சங்களுக்கு விற்கப்படுகின்றன.

தனியார் மருத்துவ, பொறியியல், கலைக் கல்லூரிகள், தொழிற்பயிற்சி, வணிக மேலாண்மை கல்லூரிகள் புற்றீசல் போல தோன்றி வளர்ந்துவிட்டன. இவற்றில் படிக்கும் மாணவர்கள் சிறைச்சாலைகளில் உள்ளவர்கள் போல் நடத்தப்படுகின்றனர். கள்ளக்குறிச்சி எஸ்விஎஸ் யோகா இயற்கை மருத்துவக் கல்லூரி மாணவிகளின் மரணம், சென்னை சாயிராம் பொறியியல் கல்லூரி வளாகத்தில் மாணவர் மரணம் போன்றவை சாதாரண சம்பவங்களாகிவிட்டன. இத்தனியார் கல்வி நிறுவனங்களை நடத்துகின்றவர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரமுகர்கள் மற்றும் முன்னாள் கல்வி அதிகாரிகள் ஆவார்கள். கல்வியின் பெயரால் பணம் பறிக்கும் பிரமுகர்களையும் மூத்த அதிகாரிகளையும் தலைவர்களாகக் கொண்ட கட்சிகள் எவ்வாறு மக்களுக்கு தரமான, இலவச, கட்டாயக் கல்வியை வழங்குவது பற்றிச் சிந்திக்கும் என்பதை நாம் உணர வேண்டும். கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கவும், கட்டாய இலவசக் கல்வியை அரசு கல்விக்கூடங்களே வழங்க வேண்டுமென கோரும் மாணவர்– ஆசிரியர்கள்–பெற்றோர்களின் வலிமையான போராட்டங்கள் நடத்தப்படவேண்டும்.

## மனிதத்தன்மையை அழிக்கும் மதுக்கடைகள்

மது, மனிதனின் சிந்தனையை கலாச்சாரத்தை சீரழிக்கிறது. பெண்கள் பாதுகாப்பை கேள்விக்குறியாக்குகிறது, உடலுக்கும் உயிருக்கும் கேடு விளைவிக்கின்றது. அனைத்திற்கும் மேலாக எது நீதி எது அநீதி, எது சரியான தத்துவம், சரியான போராட்ட வழிமுறை எனச் சீர்தூக்கிப் பார்க்கும் பகுத்தறிவை அறவே அழித்துவிடுகிறது. இதனால் சுதந்திரப் போராட்ட காலத்திலேயே மதுவை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக நிலவியது.

சுதந்திரத்திற்குப் பின் மதுவிலக்கு சட்டம் தமிழ்நாட்டில் அமுலிலிருந்தது. அதனை திமுக 1971ல் அகற்றி மதுவை முதன் முதலில் மாநிலத்தில் பரவவிட்டது. இன்று ‘நாட்டிற்கும் வீட்டிற்கும் உடலுக்கும் உயிருக்கும் கேடு விளைவிக்கும்’ என எழுதிய பலகையை வைத்துக் கொண்டு பள்ளிகள், வழிபாட்டுத்தளங்கள், குடியிருப்புப் பகுதிகள் என மக்கள் எதிர்த்தால் ஒழிய எங்கும் டாஸ்மாக் அரசு மதுபானக் கடைகள் வியாபித்திருக்கின்றன.

ஆக மக்களின் கலாச்சாரத்தை சீரழித்து போராட்ட உணர்வை மழுங்கடிக்கும் ஆளுவோரின் நோக்கம் நிறைவேறிவிட்டது. முதலாளிகளுக்கு மானியங்கள் வழங்கவும் வரித் தள்ளுபடிகள்

செய்யவும் விற்காத நுகர்வுப்பொருட்களை அரசுப் பணத்தில் வாங்கி மக்களுக்கு இலவசமாக வழங்கி பெயர் வாங்குவதற்கும் நிதி வேண்டுமல்லவா! அதற்காக இன்று சுமார் 26,100 கோடி ஆண்டு வருவாயையும் டாஸ்மாக் மூலம் அரசாங்கம் ஈட்டுகின்றது. சாராயத்தை விற்கும் முதலாளிகளுக்கும் இலாபம் கிடைக்கின்றது. இவர்களில் பலர் திமுக, அதிமுக பிரமுகர்கள் என்பதும் கவனிக்கப்படவேண்டும்.

மதுக்கடைகளை மூடவேண்டும் என்று தனி ஒருவராகப் போராடிய சசிபெருமாளின் முயற்சியின் பலனாகவும் மது சமூகத்தில் விளைவித்துவரும் கொடுமைகளினாலும் டாஸ்மாக்கை மூடக்கோரி மக்கள் போராட்டங்கள் வலுத்தன. போராட்டத்தின் நிர்ப்பந்தத்தால் இன்று அனைத்துக் கட்சிகளும் மதுவை ஒழிப்போம் என்று சொல்கிறார்கள்.

பலவழிகளிலும் மது, போதைப் பொருட்களைப் பரவவிட்டு இளைஞர்களின் சிந்தனையை சீரழித்துக்கொண்டுதான் இருப்பார்கள். மக்கள் விழிப்புணர்வு பெறுவது ஆளுவோருக்கு கசப்பான விஷயமாகும். எனவே, போராட்டத்தை மக்கள் மேலும் வலிமையாக நடத்தி நிர்ப்பந்தித்தால் மட்டுமே மது அரக்கனை ஒழிக்கமுடியும்.

## ஜாதிவெறியில் ஆணவக்கொலைகள்

ஜாதிமறுப்புத் திருமணங்கள் சமீபகாலமாக அதிகரித்து வருவது நல்ல விஷயம். ஜாதி கட்டமைப்பைத் தகர்ப்பதில் இவை குறிப்பிட்ட பங்காற்றுகின்றன. ஆனால் இதுதான் பிரச்சினையே! பாடுபடும் சாமானிய மக்கள் ஒன்றுபட்டு தனக்கெதிராக போராடி விடக்கூடாது என்பதில் கவனமாய் இருக்கும் ஆளும் வர்க்கம், ஜாதி மதம் இனம் மொழி என எல்லா பிரிவினைகளையும் வெறி உணர்வாக மாற்றி மக்களிடம் ஒற்றுமை ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறது. ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் 81 ஆணவக் கொலைகள் நடந்திருக்கின்றன. ஜாதிவெறி பிடித்த சங்கங்களும் ஓட்டுவங்கிக்காக ஜாதி அரசியல் நடத்தும் கட்சிகளும் பலமுறை புகார் அளித்தும் பாதுகாக்கத் தவறிய காவல்துறையும் இதற்குப் பொறுப்பாகும்.

ஜாதி மத செல்வாக்குகளிலிருந்து சுதந்திரப்போராட்டம் விடுபட்டிருந்தால் அக்காலத்திலேயே இந்த சமூக அநீதி அகன்றிருக்கும். ஆனால் இந்திய சுதந்திரப் போராட்டம் முதலாளித்துவத்தின் முற்றிய பிற்போக்குக் காலத்தில் நடைபெற்றது. பகத்சிங், நேதாஜி, பாரதியார், வஉசி போன்றோர் புறந்தள்ளப்பட்டு காந்தி, நேரு, பட்டேல், ராஜாஜி போன்ற மதம் மற்றும் ஜாதிய அமைப்புகளுடன்

சமரசப் போக்கைக் கடைப்பிடித்த தலைவர்களால் சுதந்திரப் போராட்டம் தலைமைதாங்கி நடத்தப்பட்டது. ஆங்கிலேயரை அகற்றி ஆட்சி அதிகாரத்திற்கு வரத்துடிக்கும் இந்திய முதலாளிகளின் தேவையை இவர்களின் தலைமை பிரதிபலித்தது. சுதந்திரப் போராட்டம் முற்போக்குத் தலைவர்களின், சோசலிச ஆதரவாளர்களின் கையில் போய்விடாமல் இருக்க முதலாளிகள் காந்தியத் தலைமையை ஆதரித்தனர். அதே சமயம் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துடனும் உள்நாட்டு நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்துடனும் சமரசம் செய்து கொண்டனர். தனக்கெதிராக மக்கள் ஒன்றுசேராமல் இருக்க ஜாதி மத வேறுபாடுகளைப் பேணி வளர்க்க விரும்பினர். சுதந்திரத்திற்குப் பிறகு அதுதான் நாட்டில் நடந்து வருகின்றது. முதலாளித்துவத்தை தூக்கி எறியாமல் ஜாதி மத வேறுபாடுகளை ஒழிக்க முடியாது. அந்த இலக்கை நோக்கி, பொதுவான கோரிக்கைகளுக்கான ஜனநாயகப் போராட்டங்களில் அனைத்து ஜாதி மத இன மொழியைச் சேர்ந்த பாடுபடும் உழைக்கும் மக்களை ஒன்றிணைக்கவேண்டும்.

## வெள்ளம் வந்தும் தாகத்திற்குத் தவிக்கும் தமிழ்நாடு

சமீபத்தில் பெய்த வடகிழக்கு பருவமழையால் சென்னை, கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், தூத்துக்குடி உள்ளிட்ட பல மாவட்டங்கள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டது. ஆனால் சரியான நீர் மேலாண்மையை செய்யாததால் தமிழகம் முழுவதும் ஏற்கனவே நீர் தட்டுப்பாடு வந்துவிட்டது.

சென்னையில் வெள்ளம் வந்தபொழுது அடையாறு, கூவம் ஆற்றுக்கருகிலுள்ள பல்வேறு பகுதிகளில் வீட்டின் முதல்மாடிவரை நீர் உட்புகுந்தது. மின்சாரம்–குடிநீர்–உணவு இன்றி குழந்தைகளும் வயதானவர்களும் அனுபவித்த துயரத்தை வார்த்தைகளால் வருணிக்க இயலாது. ஏரிகள் உடைந்ததால் வேளச்சேரி, பள்ளிக்கரணை, துரைப்பாக்கம், செம்மஞ்சேரி, குரோம்பேட்டை பழவந்தாங்கல், தாம்பரம் ஆகிய பகுதிகளில் முன்னெப்போதுமில்லாத வெள்ளம் சூழ்ந்தது. முடிச்சூர் நீரால் முடிச்சுபோடப்பட்டது. விமான சேவை ஒரு வாரம் நிறுத்தப்பட்டது. சரியான வடிகால் வசதியின்மையாலும் ஏரி–குளங்களை பாதுகாக்காததுமே இவ்வளவு வெள்ளம் சூழக் காரணமாகும். தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காத அரசாங்கத்தின் அலட்சியம் காரணமாக இவ்வாறான கஷ்டங்களை ஒவ்வொரு வருடமும் மழைக்காலங்களில் மக்கள் அனுபவிக்க நேரிடுகிறது. மழைநீருடன் சாக்கடை நீரும் கலந்து தெருக்களில் தேங்கி பெரும் அபாய நிலைக்கு மக்கள் ஆளாயினர். தாழ்வான

பகுதிகளில் ஆக்கிரமித்திருந்த தனியார் கல்லூரிகள் நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் மருத்துவமனைகள் ஐ டி பூங்காக்கள் வெள்ளத்தில் மிதந்தன. எங்கும் வெள்ளம் நிரம்பியும், சரியான நீர் தேக்க வசதிகள் இல்லாமல் அத்தனையும் கடலில் கலந்தன. இன்று மறுபடியும் குடிநீர் லாரிகளுக்குப் பின்னால் குடத்துடன் இரவு பகலாக மக்கள் பழையபடி ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

கடும் அவதிக்குள்ளான பொதுமக்களை சந்தித்து ஆறுதல் கூற ஆட்சியாளர்களுக்கு நேரமில்லை, அக்கறையுமில்லை. பிரதமர் விமானத்தில் பார்வையிட வருகிறார் என்றவுடன் அதற்குமுன் முதல்வரும் பறந்து பார்வையிட்டார். முதல்வரின் ஆர் கே நகர் தொகுதியும் சாக்கடைகளில் மிதந்தது.

தன்னார்வ குழுக்களும் சமூக அமைப்புகளும் அவசரகாலத்தில் செய்த உதவிகளில் சிறு பகுதிகூட மாநில அரசாங்கமும் மத்திய பேரிடர் மேலாண்மை ஆணையமும் செய்யவில்லை. அதுமட்டுமின்றி ஆளும் அதிமுகவினர் தங்களைத் தவிர யாரும் உதவி செய்யக்கூடாது என்று மற்றவர்களின் உதவியையும் தடுத்துநிறுத்தினர். நிவாரணப் பணிகளுக்கான அரசியல் ஆதாயத்தை தாங்களே அடையவேண்டும் என்ற நோக்கில் மனிதாபிமானமின்றி நடந்துகொண்ட செய்திகள் ஒட்டுமொத்த உலகையும் அதிர்ச்சியடையச் செய்தது. இழப்பீடுகளைச் சரியாக மதிப்பீடு செய்யாமல் ரூ5000/– பணத்தை குடியிருப்போரின் வங்கிக் கணக்கில் வரவு வைத்தனர். அடையாள ஆதாரங்கள் சரியாக கொண்டிராததால் பாதிக்கப்பட்ட பெரும்பான்மை மக்களுக்கு இது கிடைக்காமல் போனது.

## ஜனநாயக உரிமைகள்மீது தாக்குதல்

சென்றமுறை அதிமுக அரசாங்கம் அரசு ஊழியர்கள்–ஆசிரியர்கள் போராட்டத்தை கடுமையாக அடக்கி, 1,70,000 ஊழியர்களை ஒரே நாளில், ஒரே கையெழுத்தில் பணிநீக்கம் செய்ததை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். இம்முறை மதுவிலக்கு கோரி போராட்டத்தில் ஈடுபட்ட மாணவ மாணவியரை இரத்தம் சொட்டச்சொட்ட தாக்கிய அடக்குமுறையையும் மறந்திருக்கமாட்டார்கள். ஐந்தாண்டுகளும் அடக்குமுறை செய்யும் மாநில அரசாங்கத்தை தேர்ந்தெடுக்க ஒருநாள் மட்டும் ஜனநாயகம் அளிக்கப்படுவது கேலிக்கூத்தாகும்.

பொதுவாக, அமைச்சர்கள் தங்கள் துறை சார்ந்த திட்டங்களை அறிவித்து சட்டசபையில் விவாதத்திற்கு உட்படுத்துவது மரபு. எப்போதாவது அவசரத்திற்கு முதலமைச்சரே சட்டசபையில்

அறிவிப்புகளைச் செய்ய தமிழக சட்டப்பேரவையின் விதி 110 வழிவகுக்கின்றது. ஆனால் பொதுவான ஜனநாயக மரபை மீறி, முதலமைச்சர் சுமார் 200 முறை இந்த 110 விதியைப் பயன்படுத்தி 'நான் அறிவிக்கிறேன், நான் மக்களுக்கு அளிக்கின்றேன்' என்று கூறிக்கொண்டு, அமைச்சர்களுக்கும் எதிர்க்கட்சியினரின் விவாதத்திற்கும் வாய்ப்பே கொடுக்காமல் அறிவிப்புகளைச் செய்கிறார். மேலும், இதை கின்னஸ் சாதனை என்றும் குறிப்பிடுகின்றார்.

அரசாங்கத்தின் கொள்கையை எதிர்த்தும் அநீதிகளை எதிர்த்தும் போராட்டங்கள் நடந்துவிடக்கூடாது என்பதில் ஆட்சியாளர்கள் கவனமாக இருக்கின்றனர். இதற்கென்றே ஆங்கிலேயர் காலத்தில் போடப்பட்ட நகர் காவல் சட்டம் 41-A மற்றும் பிற பிரிவுகள் இன்னமும் அமலில் இருக்கின்றன. சிறு ஆர்ப்பாட்டத்திற்கும் தெருமுனைக் கூட்டத்திற்கும் ஐந்துநாட்கள் முன் அனுமதி பெறவேண்டும். துண்டுப் பிரசுரங்கள் அடிப்பதற்கு காவல்துறை அனுமதி வேண்டும் என்ற வேடிக்கை வேறெந்த மாநிலத்திலும் இல்லை. ஊழலெதிர்ப்பு, பெண்கள்மீதான வன்கொடுமை எதிர்ப்பு, பல்கலைக்கழக மாணவர்மீதான தாக்குதலுக்கு எதிர்ப்பு என நாடெங்கிலும் போராட்டங்கள் நடக்கலாம். ஆனால் தமிழ்நாட்டில் முனகினால்கூட நிர்வாகம் தாங்கிக் கொள்ளாது.

அதிமுக ஆட்சியைக் குறைகூறி யாரும் வாயைத் திறந்துவிடக் கூடாது. இதுவரை பல்வேறு பத்திரிகைகள், அரசியல் கட்சித் தலைவர்கள், தொலைக்காட்சி நிருபர்கள் என பலரின் மீது 230 அவதூறு வழக்குகளை அதிமுக அரசாங்கம் போட்டுள்ளது. மதுக் கடைகளை மூடக்கோரி பிரச்சாரம் செய்த பாடகர் கோவன்மீது தேச துரோக வழக்கே போடப்பட்டது. இத்துணை அவதூறு வழக்குகள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. முந்தைய திமுக அரசாங்கமும் 50 அவதூறு வழக்குகளைப் போட்டது. உலகில் எந்த ஜனநாயக நாட்டிலும் அரசின் கொள்கைகளையும் மக்கள் பிரதிநிதிகளையும் விமரிசிக்கும் உரிமைக்கு தங்குதடையில்லை. ஆனால் இங்கு அவதூறு சட்டத்தின் வரம்புமீறிய பாய்ச்சலால் அச்சுறுத்தலாலும் அடக்குமுறையாலும் விமர்சகர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் மிரண்டுகிடக்கின்றனர்.

## திராவிடக் கட்சிகளுக்கு மாற்று எனக் கூறிக்கொள்ளும் பாஜக

தொடர்ந்து மாறிமாறி ஆட்சிக்கு வரும் அதிமுக, திமுக கட்சிகளின் பிடியிலிருந்து தமிழ்நாடு மீட்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால், அதை அகற்ற வேண்டுமென்று அறைகூவல்

விடுக்கின்ற பாஜக, மத்தியிலும் பல்வேறு மாநிலங்களிலும் ஆட்சிப் பொறுப்பிலிருந்து கொண்டு மக்கள் விரோத ஜனநாயக விரோத நடவடிக்கைகளை தொடர்ந்து கட்டவிழ்த்துக்கொண்டிருக்கின்றது. மேக் இன் இந்தியா, அச்சே தின் என்றெல்லாம் கவர்ச்சிக் கோஷங்களுடன் மத்தியில் ஆட்சிக்கு வந்த பாஜக, இரண்டாண்டுகால ஆட்சியில் எந்த வளர்ச்சியையும் கொண்டுவரவில்லை. இரயில் கட்டணத்தை பலமுறை உயர்த்தியது. நாட்டைப் பாதுகாக்கவேண்டிய ராணுவத்துறையிலேயே அன்னிய நேரடி முதலீட்டை 50% மேல் அனுமதித்தது. குப்பைகளைச் சுத்தம் செய்வதாகக்கூறி 2% செஸ்வரி விதித்தது. தொழிலாளர்களின் பிஎஃப் சேமிப்பின்மீது வரிபோட்டது.

ஊழலைப் பொறுத்தமட்டில் முன்பே அகில இந்திய பாஜக தலைவர் பங்காரு இலட்சுமண் பணம் பெற்றுக்கொண்ட ஊழல் ஊரறிந்ததே. மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சியிலிருந்தால் வளர்ச்சித்திட்டங்களை நன்றாக செயல்படுத்தமுடியும் என்று பேசுகின்றனர். ஆனால் பாஜக மூன்றுமுறை தொடர்ந்து ஆட்சிசெய்யும் மத்தியப் பிரதேசம் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றது. அங்கு கவர்னரின் மகன் உட்பட 48 நபர்களின் மர்ம மரணத்தை உள்ளடக்கிய வியாபம் ஊழல் நாட்டையே உலுக்கியது. கிரிக்கெட் வாரிய ஊழலில் தொடர்புடைய லலித் மோடி விவகாரத்தில் பாஜக மத்திய அமைச்சர் திருமதி சுஷ்மா சுவராஜும் ராஜஸ்தான் முதல்வர் திருமதி வசுந்த்ரா ராஜே சிந்தியாவுக்கும் தொடர்பு உண்டு என்ற செய்திகளை மக்கள் அறிவர்.

அனைத்திற்கும் மேலாக பாஜகவின் மதவாத ஜாதியவாத அரசியல் மக்கள் ஒற்றுமையைக் குலைத்து வருகின்றது. ஹைதராபாத் மத்திய பல்கலைக்கழகமும் மத்திய அரசாங்கமும் செய்த சித்திரவதை மற்றும் பழி வாங்கும் நடவடிக்கையை தாங்க முடியாமல் புத்தி கூர்மையுள்ள ஆராய்ச்சி மாணவரான ரோஹித் வெமுலா தற்கொலை செய்து கொண்டார். அதற்கு மத்திய அமைச்சர்கள் திரு பண்டாரு தத்தாத்ரேயா, திருமதி ஸ்மிருதி இராணி ஆகியோருக்கும் பொறுப்புண்டென்று பல ஊடகங்களும் சுட்டிக்காட்டியுள்ளன. ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக (ஜேஎன்யு) மாணவர்கள் மீது பாஜக மற்றும் அதன் பரிவாரங்கள் நடத்திய கோழைத்தனமான தாக்குதல்களும், குறிப்பாக மாணவர் பேரவைத்தலைவர் கன்னையா குமார் கைது செய்யப்பட்ட விதமும் அவர்கள் மீது தேசத்துரோக வழக்கு பதிவு செய்ததும், மாணவர்களையும் ஜனநாயக உணர்வு மிக்கவர்களையும் அச்சுறுத்தி வருகிறது.

*மாட்டிறைச்சி சாப்பிட்டார் எனக் கூறி சிறுபான்மை மதத்தைச் சார்ந்தவர் பட்டப்பகலில் சங் பரிவார கும்பலால் அடித்துக் கொல்லப் பட்டார். கிறிஸ்தவ ஆலையங்கள் தலைநகர் டெல்லியிலேயே தாக்கப்பட்டன. பகுத்தறிவு சிந்தனையாளர்கள் கொல்லப்படுகின்றனர். தமிழ்நாட்டிலும் எழுத்தாளர் பெருமாள் முருகன் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. கொடுமை தாங்க முடியாமல் எழுதுவதையே நிறுத்திவிடுவதாக கூறும் உச்சத்திற்கு அவர் தள்ளப்பட்டார். சென்னை ஐஐடியில் அம்பேத்கர்–பெரியார் படிப்பு வட்டம் மீதான கெடுபிடிகள் பாஜகவின் வகுப்புவாத ஃபாசிச செயல்பாடுகளுக்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாகும்.*

## மக்கள் நலக்கூட்டணி–தேமுதிக, தமாகா கலவை

*புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கும் வகுப்பு வாதத்திற்கும் எதிராக மக்கள் பிரச்சினைகளை மையப்படுத்தி ஒன்றுபட்ட இயக்கங்களை நாடுதழுவிய அளவில் கட்டியெழுப்ப* ***6*** *இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்பு* ***2014****ல் உருவாக்கப்பட்டது. இதில் எமது கட்சியாகிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மற்றும் சிபிஐ, சிபிஐ (எம்), சிபிஐ (மா–லெ), ஆர்எஸ்பி, ஃபார்வர்ட் பிளாக் ஆகியவை இருக்கின்றன. அக்கூட்டமைப்பு நடத்தி வந்த மக்கள் போராட்டங்கள் எல்லாம் இடதுசாரி ஆதரவாளர்கள் ஜனநாயக உணர்வுள்ளவர்கள் கட்சி சாராத நடுநிலையாளர்கள் ஆகியோரிடையே உற்சாகத்தையும் நம்பிக்கையையும் உருவாக்கிக் கொண்டிருந்தது.*

*ஆனால் அதை அந்தரத்தில் தொங்கவிட்டு, சிபிஐ, சிபிஐ (எம்) ஆகிய இரண்டு கட்சிகளும் இடதுசாரிப் போராட்டப் பாதையிலிருந்து விலகி திடீரென்று மதிமுக, விடுதலைச் சிறுத்தைகள், மனிதநேய மக்கள் கட்சி ஆகியவற்றை இணைத்து 'மக்கள் நலக்கூட்டணி'யை உருவாக்கின. சிலநாட்களிலேயே மனிதநேய மக்கள் கட்சி அக்கூட்டணியிலிருந்து விலகியது. தேர்தல் அறிவிப்பு வந்த பின்னர் மற்ற நான்கு கட்சிகளின் கூட்டணி தேமுதிகவுடன் கூட்டுக்கு முயற்சித்தன. முதலில், முதலமைச்சர் வேட்டாளர் யார் என்பது தேர்தலுக்குப் பின்னரே அறிவிப்போம் என்று கூறினார்கள். ஆனால் தேமுதிக தலைவர் திரு விஜயகாந்த் அவர்களை முதலமைச்சர் வேட்பாளராக ஏற்றுக்கொண்டால்தான் கூட்டு என்ற நிலையில் அதையும் ஏற்றுக்கொண்டு கூட்டணி அமைத்தனர். அதற்கு முன்பு வரை பாஜகவுடனும் திமுகவுடனும் தேமுதிக பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருந்தது. கடைசி நேரத்தில் தன்னை முதல்வர் வேட்பாளராக மக்கள் நலக்கூட்டணி ஏற்றுக்கொண்டதன்*

அடிப்படையில் தேமுதிக அவர்களுடன் புதிய கூட்டணியை உருவாக்கியது. கடந்த தேர்தலில் இதே தேமுதிகவின் கடைசி நேர ஆதரவுடன்தான் அதிமுக ஆட்சியைப் பிடித்தது என்பதை இங்கு நினைவில் கொள்ளவேண்டும்.

மதவாதத்தையும் வகுப்பு வாதத்தையும் தங்கள் மூச்சாகக் கொண்டுள்ள பாஜக கூட்டணியிலும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியிலும் அதிமுக மற்றும் திமுக கூட்டணிகளிலும் மதிமுகவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் அங்கம் வகித்த கட்சிகளே. இப்படி கொள்கை, உண்மை, நெறிமுறைகள் எதுவுமின்றி ஒன்றாக இணைந்து உருவான சந்தர்ப்பவாத கூட்டணியே மக்கள் நலக் கூட்டணியாகும். இது திமுக, அதிமுக கட்சிகளுக்கு எவ்விதத்திலும் மாற்றாகாது.

இடதுசாரி இயக்கங்களைத்தவிர எந்தக் கட்சியாலும் ஊழலுக்கு எதிரான, சுரண்டல் அடக்குமுறைக்கு எதிரான மாற்றத்தைத் தர முடியாது என்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற சிபிஐ (எம்), சிபிஐ, சிபிஐ (மா–லெ), எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) நடத்திய போராட்டங்களில், கருத்தரங்குகளில் சிபிஐ (எம்), சிபிஐ தலைவர்கள் முழங்கினர். இந்த அமைப்போடு ஒட்டிப்பிறந்த ஊழலை, அமைப்பையே மாற்றாமல் ஒழிக்க முடியாதென்று ஆணித்தரமாகக் கூறினார்கள். ஆனால் இன்றோ, முதலாளித்துவ கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணியால் ஒழிக்க முடியும் என்று புது முழக்கமிடுகின்றனர்.

மேலும் இவர்கள் மேற்குவங்க அரசாங்கத்தில் சிங்கூர், நந்திகிராம் விவசாயிகள்மீது துப்பாக்கிச் சூடு நடத்தியும் பெண்களை வன்கொடுமைக்கு ஆளாக்கியும் இரத்தக்கறை படிந்தவர்கள் என்பதை மறந்துவிடலாகாது. அது மட்டுமின்றி மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் உடன் கூட்டணி வைத்துள்ளனர். இவர்களின் சந்தர்ப்பவாத அரசியலால் மார்க்சிசம் – லெனினிசம் என்ற உன்னதத் தத்துவத்தை நேசிக்கும் உண்மையான இடதுசாரி எண்ணம் கொண்டோர் வெறுப்பும் வேதனையும் அடைந்துள்ளனர்.

## தேர்தல்கள் மூலம் அரசாங்கங்கள் மாறலாம், ஆனால் அரசு மாறுவதில்லை

ஒரு நாட்டில் நிர்வாகம், போலீஸ், நீதித்துறை, இராணுவம் ஆகிய பிரதான தூண்களைக் கொண்டதே அரசு என்ற அமைப்பாகும். முதலாளித்துவ உடைமையாளர்கள், தொழிலாளிகள் என வர்க்கப் பிளவு கொண்ட நாட்டில் அரசு அமைப்பும் ஒரு வர்க்கத்தின்

*அமைப்பாக இருக்கின்றது. நமது நாட்டில் சுதந்திரத்திற்குப்பின் அதிகாரத்திற்கு வந்த இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் அரசாக அரசு அமைப்பு நிலவுகின்றது.*

*சுரண்டும் ஆலை முதலாளிகளின் நலனுக்காகவும் அதற்கு எதிராக தீராத முரண்பாடு கொண்டுள்ள தொழிலாளிகள் விவசாயிகள் ஏழை நடுத்தர மக்கள் ஆகியோரின் நலனுக்கு எதிராகவும் இந்த அரசு இயந்திரம் செயல்படுகின்றது. முதலாளித்துவ பொருளாதார அடித்தளத்தின்மீது அரசியல் மேற்கட்டுமானமாக பாராளுமன்றங்கள், சட்ட மன்றங்கள் இருக்கின்றன.*

*ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் நன்மைக்காகவும் மக்களின் ஜனநாயக போராட்ட உரிமைகளை பறிப்பதற்காகவுமே இந்த மன்றங்களில் கொள்கைகளும் சட்டங்களும் போடப்படுகின்றன. சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் என்ற ஜனநாயக முழக்கங்களுடன் நிறுவப்பட்ட மக்கள் மன்றங்களான பாராளுமன்றத்திலும் சட்ட மன்றத்திலும்தான் எஸ்மா, மிசா, தடா, பொடா போன்ற ஜனநாயக விரோத கறுப்புச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. சுருங்கக் கூறின் பாராளுமன்றமும் சட்டமன்றங்களும் இருக்கின்றன; ஜனநாயகம்தான் இல்லை.*

*சுரண்டும் முதலாளித்துவத்தினால் தினந்தோறும் அதிகரிக்கும் வறுமை வேலையின்மை விலையேற்றம் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்கக்கோரி மக்கள் இந்த அமைப்பிற்கே எதிராக போராடிவிடாமல் பார்த்துக்கொள்ள முதலாளிகளின் அரசியல் மேனேஜர்களாக அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. அவர்களின் நிதி ஆதரவுடன் தேசிய அளவில் காங்கிரஸ், பாஜக மாநில அளவில் திமுக, அதிமுக ஆகியவையும் இன்னும் பல கட்சிகளும் செயல்புரிகின்றன. தேர்தலின் மூலம் அரசாங்கத்திற்கு வரும்போதெல்லாம் இக்கட்சிகளும் கூட்டணிகளும் சுரண்டல் அரசு இயந்திரத்தை இயக்கும் ஓட்டுனர்களாக செயல்படுகின்றனர். எனவே, தேர்தலின் மூலம் அரசாங்கம்* (governments) *அதாவது ஓட்டுனர் மாறுகின்றார். ஆனால் அதே சுரண்டல் அரசு* (State) *அமைப்பும் அதன் நிர்வாக, போலீஸ் நீதிதுறை, இராணுவ துறைகளும் அதாவது இயந்திரம் மாறாமல் நீடிக்கின்றது. உழைப்புச் சக்தியைச் சுரண்டி இலாபத்தை ஈட்டி மூலதனத்தைத் தனி உடைமையாளர்களிடம் குவிக்கும் முதலாளித்துவ சுரண்டல் இயந்திரம் மேன்மேலும் வேகமாக செயல்படுகின்றது. மக்களின் வாங்கும் சக்தி குறைந்து சந்தைப் பொருளாதார நெருக்கடி முற்றி பொருளாதார சரிவும் வீழ்ச்சிகளும் அடிக்கடி நிகழ்கின்றன.*

ஆலைகள், நிலங்கள், உற்பத்தி நிறுவனங்கள், உற்பத்தி சாதனங்கள் ஆகியவற்றின் மீதான தனி உடைமையை அகற்றி சமூக உடைமையை நிலை நிறுத்த வேண்டும். அப்பொழுதுதான் உற்பத்தி செய்யப்படும் அனைத்தும் சமூகத்திற்கே பகிர்ந்து அளிக்கப்பட முடியும். அதற்கு இந்த முதலாளித்துவ அரசு அமைப்பையே மாற்றி புதியதொரு சோசலிச அரசை நிறுவ வேண்டும். ஆக, தேர்தலின் மூலம் வெறுமனே ஓட்டுப்போட்டு அரசாங்கத்தை அதாவது ஓட்டுனரைமாற்றினால் பிரச்சினைகள் தீராது. உண்மையான மாற்று புரட்சியின் மூலம் அரசு அமைப்பையே மாற்றுவதில்தான் இருக்கின்றது.

நிர்வாக அதிகாரம் மக்களின் கைகளுக்கு மாற்றப்பட வேண்டும். ஒவ்வொரு பிரிவினரின் கோரிக்கைகளுக்காக போராட, மக்கள் கமிட்டிகள் நிறுவப்படவேண்டும் அந்த கமிட்டிகளே மக்களின் நல்லாட்சிக்கு வித்திடும் என்பதை பொதுமக்கள் தெளிந்துணர வேண்டும். அப்படிப்பட்ட மாற்றை உருவாக்கவே எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து 68 ஆண்டுகளாக பாடுபட்டு வருகிறது.

## எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி தேர்தலில் நிற்பதன் நோக்கம் என்ன?

இக்கேள்விக்கான பதிலை எமது கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் சமீபத்தில் பத்திரிகைகளுக்கு கொடுத்த பேட்டியிலிருந்து எடுத்தாள விரும்புகிறோம்.

எமது கட்சியின் நிறுவனரும், எங்களது ஆசானும், மாபெரும் மார்க்சிய சிந்தனையாளர்களுள் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் போதனைகளின் அடிப்படையிலேயே நாங்கள் தேர்தல்களை சந்திக்கிறோம். உண்மையான மார்க்சிய கட்சி என்றவகையில் நாங்கள் ஒருபோதும் கோட்பாடற்ற சந்தர்ப்பவாத கூட்டணிக்குள் நுழைந்ததில்லை. எதைச்செய்தேனும் தேர்தல்களில் வெற்றி பெறவேண்டும் என்றோ எவ்வகையிலேனும் எம்எல்ஏக்கள் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடோ வெற்றி வாய்ப்பு அதிகமாக்கக்கூடிய கட்சிகளோடு நாங்கள் ஒருபோதும் இணைந்ததில்லை. நாங்கள் ஓய்வொழிவின்றி நாடு முழுவதும் வர்க்க–வெகுஜன இயக்கங்களை வளர்த்துவருகிறோம். மத்திய, மாநில அரசாங்கங்களின் மக்கள்விரோத கொள்கைகளுக்கு எதிராக தொழிலாளர் – விவசாயிகள் – நடுத்தரவர்க்கத்து மக்களின் வாழ்வை வாட்டும் கடுமையான பிரச்சினைகளுக்காக அம்மக்களது

போராட்ட இயக்கங்களை கட்டுகிறோம். முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சிக்கு இட்டுச்செல்லும் வகையில் இவ்வியக்கங்களை கட்டி வருகிறோம்.

தற்போது நிலவும் சமூக அமைப்பு முறையை அப்படியே வைத்துக்கொண்டு தேர்தல்கள் மூலம் ஆளும்கட்சியை அகற்றிவிட்டு மற்றொரு கட்சியை ஆட்சியில் அமர்த்துவதால் மக்கள் வாழ்வில் அன்றாடம் சந்திக்கும் அடிப்படையான பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டாது. நாம் பெரிதும் விரும்புகின்ற விமோசனமானது தற்போதுள்ள சுரண்டல் சமூக அமைப்புமுறையை புரட்சியின் மூலம் மாற்றினால் மட்டுமே கிடைக்கும். ஆனால், மக்களை சித்தாந்தரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் அறநெறி ரீதியாகவும் தயார்ப்படுத்தாத வரையில் இவ்வமைப்பு முறையும் இதில் தேர்தல்களும் நடந்துகொண்டுதான் இருக்கும். மக்களும் இந்த தேர்தல் எனும் வலைக்குள் சிக்குண்டே கிடப்பர். இத்தேர்தல் மாயையிலிருந்து மக்களை விடுவிப்பதற்காக எமது கட்சியும் தேர்தல் போட்டியில் ஈடுபடவேண்டியுள்ளது. நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் மக்களின் கோரிக்கைகளையும் நியாயமான போராட்டக் குரலையும் பாராளுமன்றம், சட்டமன்றங்களுக்குள் எதிரொலிப்போம். அதே வேளையில் இந்த மன்றங்களுக்கு வெளியே உழைக்கும்வர்க்கத்தின் போராட்டங்களையும் வெகுஜன இயக்கங்களையும் வளர்த்தெடுப்பதற்கு தொடர்ந்து பாடுபடுவோம். மாமனிதர் லெனின் அவர்கள் காட்டிய வழியும் இதுவே.

தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தர மக்கள் ஆகியோரின் போராட்ட இயக்கங்களை பலப்படுத்துவதற்காக, ஜனநாயக இயக்கங்களின் வீரியத்தை பாதுகாப்பதற்காக நாங்கள் தேர்தலில் போட்டியிடுகிறோம். மத்திய பாஜக அரசாங்கத்தின் ஃபாசிச தாக்குதல்களுக்கு எதிராக நாடு முழுவதும் உள்ள சட்ட வல்லுனர்கள், கல்வியாளர்கள், கலைஞர்கள், சிந்தனையாளர்கள், விஞ்ஞானிகள் உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் எழுப்பும் எதிர்ப்புக் குரல் வலுப்படுத்தப்படவேண்டும். இத்தகைய கண்ணோட்டத்தோடும் அணுகுமுறையோடும் நாங்கள் தேர்தலில் போட்டியிடுகிறோம். மக்கள் மீது நாங்கள் நம்பிக்கை வைத்துள்ளோம். நற்சிந்தனை உடையோர், இடதுசாரி எண்ணங்கொண்டோர், ஜனநாயக மனம்படைத்தோர் அனைவரும் எங்களுக்கு ஆதரவு நல்குவர்.

எங்களைப் பொறுத்தவரை தேர்தல் என்பதுகூட சித்தாந்தம், கோட்பாடுகளின் அடிப்படையில் நடத்தப்படும் ஒரு போராட்ட

இயக்கத்தின் வடிவம்தான். எங்கள் கட்சியைப் பொறுத்தவரை சில எம்எல்ஏ, எம்பிக்களைவிட குதிராம், பகத்சிங், நேதாஜி, ப்ரீதிலதா, பாரதியார் போன்ற ஒரே ஒரு நற்குணத் தலைவர் இப்போராட்டத்தின் மூலம் உருவானால் அவர் மக்களுக்கு மிகவும் மதிப்பிற்குரியவராவார்.

இதுபோன்ற தலைவர்கள்தான் தங்கள் இன்னுயிரையும் ஈந்து புரட்சியின் பதாகையை தாங்கி நிற்பர். ஒரு சில இடங்களில் நாங்கள் ஜெயித்தோமானால் நல்லதுதான். ஆனால், அவ்வாறு ஜெயிக்காவிட்டாலும்கூட ஒன்றும் பாதகமில்லை. மார்க்சிசம்–லெனினிசம் சிப்தாஸ் கோஷ் சிந்தனை என்ற மாபெரும் தத்துவத்தின் பலத்தின் அடிப்படையில் எங்களுடைய போராட்டதைத் தொடர்ந்து நடத்துவோம்.

## மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் வேண்டுகோள்

மது, போதை, சூதாட்டம் என்ற புதைசேற்றில் சிக்கி இளைஞர்கள் மீளும் வழியறியாது துடித்துக்கொண்டிருக்கின்றனர். பாலியல் வக்கிரங்கள், ஆபாசப்படங்கள் போன்றவற்றில் மூழ்கியுள்ளனர். பெற்றோர்கள் அவமதிக்கப்படுகின்றனர். பெண்கள் வன்புணர்வுக்கு ஆளாகின்றனர். பெண்கள் மீது இத்தகைய கொடூரக் குற்றங்கள் புரிவோர் மனிதர்களா? மிருகங்கள்கூட இத்தகைய குற்றங்களை செய்யுமா? இதுபோன்ற மிருகங்களை விட கேவலமான மனிதப் பிறவிகள் எவ்வாறு உருவாகின்றனர்? இரு நூற்றாண்டுகளுக்கு முன்பு மன்னராட்சியை எதிர்த்து வளர்ச்சிபெற்ற முதலாளித்துவம் பல மிகச் சிறந்த மனிதர்களை உருவாக்கியது. இன்று முதுநிலை எய்தி பிற்போக்காகி சோசலிசத்திற்கு வழித்தடையாக மரணப்படுக்கையில் கிடக்கும் முதலாளித்துவம்தான் இப்பிறவிகளை உருவாக்குகிறது. மனித சாராம்சத்தையும் மனித குணத்தையும் அது அழிக்கிறது.

தமிழகத்தின் இன்றைய நிலையைக் காணும்போது பாரதியார், வஉசி, சுப்பிரமணிய சிவா, வாஞ்சிநாதன் திருப்பூர் குமரன் போன்ற போராளிகளும் சி வி ராமன், ராமானுஜன் போன்ற அறிவியல் மேதைகளும் தோன்றியது இம்மண்ணில்தானா என்று வியக்கத் தோன்றுகிறது. அத்தகைய ஒளி இன்று மங்கிப்போனதேன்? சமுதாயத்தில் புரட்சிகர சித்தாந்தத்திலும் உயர்ந்த நல்லொழுக்கத்திலும் முன்மாதிரியாகத் திகழும் தலைவர்களையும் தொண்டர்களையும் கொண்ட அரசியல் சமூக கலாச்சார இயக்கம் இல்லாமல்போனதே இதற்குக் காரணமாகும். மாணவர்–இளைஞர்கள் முன் இருக்கும்

கடமை, இத்தகைய இயக்கத்தை கண்டறிந்து பங்கு கொண்டு வளர்த்தெடுப்பதுவே ஆகும்.

## மக்கள் ஆதரவே எமது பலமாகும்

மத்தியிலுள்ள பாஜகவிற்கு எதிராகவும், காங்கிரசுக்கு எதிராகவும், மாநிலத்தில் அதிமுக, திமுக ஆட்சிக்கு எதிராகவும், தேமுதிக, தமாகா உள்ளிட்ட மக்கள் நலக் கூட்டணியின் சந்தர்ப்பவாதத்திற் கெதிராகவும் நாங்கள் போராடுகிறோம். இந்தக் கட்சிகள் அனைத்தும் தொழிலதிபர்கள், பெரும் வர்த்தகர்கள், கள்ளச்சந்தைக்காரர்கள் போன்றோர் தரும் பணபலத்தைக் கொண்டு தேர்தலில் போட்டியிடுகின்றனர். அப்பணத்தைக் கொண்டு அடியாட்களையும் கிரிமினல்களையும் அவர்கள் விலைக்கு வாங்கி தேர்தலில் புஜபலத்தைக் காட்டுகின்றனர். பணத்திற்கு ஓட்டுக்களையும் அடமானமாகப் பெறுகின்றனர். முதலாளித்துவவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்களும் இவர்களை முன்னிலைப் படுத்தி பிரச்சாரம் செய்கின்றன. தேர்தல் கமிஷனும் ஒப்புக்கு சில நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட்டு சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்திவிட்டதாக பாவனை காட்டுகிறது. ஆயினும், தேர்தல் முறைகேடுகள் என்னவோ நடந்துகொண்டுதான் இருக்கிறன. ஒரு புரட்சிகர கட்சி என்ற வகையில் இவை எல்லாவற்றுக்கு எதிராகவும் நாங்கள் தன்னந்தனியாக போராட்டம் நடத்துகிறோம்.

உன்னத சித்தாந்தத்திலிருந்தும் கட்சியின் உயர்ந்த நல்லொழுக்கம் மற்றும் அறநெறிகளிலிருந்தும் மக்களிடமிருந்து கிடைக்கும் குறையாத அன்பிலிருந்தும் தொடர்ந்து அவர்கள் அளிக்கும் ஆதரவிலிருந்தும்தான் நாங்கள் எங்கள் பலத்தைப் பெறுகிறோம். இதைவிட பலமிக்க ஒன்று எதுவும் இருக்க முடியாது. இந்த நம்பிக்கையோடுதான் நாங்கள் தேர்தலில் போட்டியிடுகிறோம்.

## வாக்காளர்களுக்கு வேண்டுகோள்

வெற்று வார்த்தைகளாலும் பொய்ப்பேச்சுக்களாலும் தவறாக வழிநடத்தப்பட்டு விடாதீர்கள். காசுக்கு விலைபோய்விடாதீர்கள். கண்ணியத்தோடும் கௌரவத்தோடும் தலைநிமிர்ந்து நில்லுங்கள். பல காலக்கட்டங்களில் இம்மண்ணில் தோன்றிய மாமனிதர்களையும், அறிவிற்சிறந்தோரையும், சுதந்திரப்போராட்ட காலத்தில் இம்மண்ணில் உலவிய புரட்சியாளர்களையும் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.

இன்றைக்கு அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், மனிதத்துவம், சமூக வாழ்வு, குடும்ப வாழ்வு, பெண்களின் பாதுகாப்பு, அன்பு,

*பாசம், நேசம், சக மனிதர் மீதான அக்கறை, கருணை என அனைத்தையும் அழித்துக்கொண்டிருப்பது முதலாளித்துவமே. வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் ஈவிரக்கமற்ற முதலாளித்துவ சுரண்டலெனும் நுகத்தடியில் சிக்கி அல்லலுறுவதிலிருந்து விடுதலை பெறுவதற்கு நமக்குத் தேவை சோசலிசப் புரட்சியாகும். தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களால் நிறுவப்பட்ட எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) சோசலிசப் புரட்சியின் பதாகையை எப்போதுமே உயர்த்திப் பிடித்துள்ளது.*

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை வலுப்படுத்துவீர். தேர்தலில் சென்னை–ஆர் கே நகர் மற்றும் மதுரை–வடக்கு தொகுதிகளில் போட்டியிடும் எமது வேட்பாளர்களை வெற்றிபெறச்செய்வீர். எமது கட்சி வேட்பாளர்கள் இல்லாத தொகுதிகளில் நேர்மையும் நாணயமும் கொண்ட ஊழல் கறைபடியாத மக்களுக்காகப் போராடும் ஜனநாயக எண்ணம் கொண்ட வேட்பாளர்களை ஆதரிப்பீர்.*

# கீழ்க்கண்ட கோரிக்கைகளின் அடிப்படையில் மக்களின் போராட்ட இயக்கங்களை வலுப்படுத்தவும் மக்கள் கமிட்டிக்களை உருவாக்கி போராடவும் முன்வருமாறு அறைகூவி அழைக்கின்றோம்

## கோரிக்கைகள்

- மக்கள் வாழ்வைச் சூறையாடும் உலகமய தாராளமய தனியார்மய கொள்கையை கைவிடு !
- விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்து. அத்தியாவசியப் பொருட்களின் கொள்முதலையும் விநியோகத்தையும் அரசே மேற்கொள். ரேசன் கடைகளை அதிகமாகத் திற !
- அரசு, பொதுத்துறை காலிப்பணியிடங்களை நிரப்பு. நிரந்தரப் பணிகளை அவுட்சோர்சிங் முறைக்கு மாற்றாதே !

- அனைவருக்கும் வேலைகொடு. குறைந்தபட்ச ஊதியமாக மாதம் ரூ15,000 வழங்கு !
- கல்வியை, மருத்துவத்தை வியாபாரமயமாக்காதே. அரசுப் பள்ளி, கல்லூரிகளை அதிகமாகத் திற !
- விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை அரசே கட்டுபடியான விலையில் கொள்முதல் செய் !
- சுத்தமான குடிநீரை அனைத்து இல்லங்களுக்கும் வழங்கு. குடிநீரை விற்பனைப் பொருள் ஆக்காதே !
- மதுக்கடைகளை மூடு ! இன்டெர்நெட் தொலைக்காட்சி ஊடகங்களில் பாலியல் கலாச்சாரப் பரவலை தடைசெய் !
- பெண்கள் மீதான குற்றச் செயல்களையும், வன்கொடுமைகளையும் தடுத்து நிறுத்து ! குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்கு !
- நெடுஞ்சாலைப் போக்குவரத்து சுங்க வரிவசூலை கைவிடு !
- மதவாத ஜாதியவாத மற்றும் மக்களைப் பிளவுபடுத்தும் சக்திகளை தடைசெய் !
- பெட்ரோல் டீசல் சமையல் எரிவாயு மீது அரசு கட்டுப்பாட்டை மீண்டும் கொண்டுவா !
- ஊழலை ஒழித்துக்கட்டு. ஊழலில் ஈடுபடுவோருக்கு அதிகபட்ச தண்டனை கொடு !
- மக்களின் நியாயமான பேச்சுரிமை, எழுத்துரிமை, ஒன்றுகூடும் உரிமை, போராடும் உரிமைகளை நிர்வாகத்தையும் காவல்துறையையும் ஏவி நசுக்காதே !

# எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வீர் !

## மதுரை வடக்கு : தோழர் M J வால்டேர்

தோழர் M J வால்டேர் *(48)* எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியில் ***23*** ஆண்டுகளாக முழுநேர ஊழியராக பணியாற்றி வருகிறார். எம் ஏ பட்டதாரியான இவர் மதுரை– திண்டுக்கல்–தேனி மாவட்ட அமைப்புக்கமிட்டி உறுப்பினர் பொறுப்பில் இருக்கின்றார். அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO) வின் மாநில அமைப்புக் கமிட்டிச் செயலாளராகவும் அகில இந்திய செயற்குழு உறுப்பினராகவும் இருக்கின்றார்.

தேனி மாவட்டத்தில் அல்லிநகரத்தில் மதுக் கடையை அகற்றவும் மக்களின் சுகாதாரப்பிரச்சினைகளுக்காகவும் ‘மக்கள் போராட்டக் கமிட்டி’ அமைத்து போராடுவதில் முன்னணி வகித்தார்.

இடதுசாரி கட்சிகளின் சமீபகால கூட்டு போராட்டங்களில் முனைப்புடன் பங்கேற்று வருகிறார். கல்வியை தனியார்மயம், வியாபாரமயம், காவிமயமாக்கும் கல்விவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக தனது அமைப்பின் சார்பாகவும் பல்வேறு மாணவர் அமைப்புகளின் கூட்டு இயக்கங்களிலும் முன்னணிப்பங்காற்றி வருகிறார்.

## சென்னை – ஆர் கே நகர் : தோழர் E சடையாண்டி

தோழர் E சடையாண்டி *(53)*, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியுடன் ***1987***ம் ஆண்டு தன்னை இணைத்துக் கொண்டார். மத்திய தொழிற்சங்கமான ஏஐயுடியுசியில் இணைக்கப்பட்ட சென்னை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தொழிலாளர் சங்கத்தை உருவாக்கியதில் அவரும் ஒருவராவார்.

சென்னையில் ***1989*** ஆண்டில் கடும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக் கோரி கட்சி நடத்திய மக்கள் பேரணியில் கொருக்குப்பேட்டை மக்களைத் திரட்டுவதில் முன்னணிப் பங்காற்றினார். ஆர் கே நகர் பகுதிப் பிரச்சினைகளுக்காகவும் டாஸ்மாக் கடையை அகற்றக்கோரியும் மீனாம்பாள்நகர் மேம்பாலப்பணியை முடிக்கக்கோரியும்

‘கொருக்குப்பேட்டை மக்கள் போராட்டக் கமிட்டி’யை அமைத்து போராடுவதில் முன்னணி வகித்தார்.

**2015** டிசம்பரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆர் கே நகர் பகுதியில் நிவாரணப் பணிகளை தோழர்களுடன் இணைந்து மேற்கொண்டார். எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் வட்டார அமைப்புக்கமிட்டி உறுப்பினராகவும் ஏஐயுடியுசியின் மாவட்ட குழு உறுப்பினராகவும் இருக்கும் தோழர் சடையாண்டி, உன்னத கம்யூனிச தத்துவத்தை தொடர்ந்து தொழிலாளர்களிடையே எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்.

## எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்ய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி வெளியிட்ட அறிக்கை

தமிழ்நாட்டில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் மாநிலத்தில் உலகமய தாராளமய தனியார்மயக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அஇஅதிமுக, திமுக ஆகிய கட்சிகளுக்கும் அவற்றின் கூட்டணிகளுக்கும் எதிராகவும், ஏழை நடுத்தர மக்கள்மீது அவர்கள் தொடுத்துவரும் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராகவும் ஜனநாயக உரிமைகளுக்கு குரல்கொடுக்கவும் இடதுசாரி இயக்கத்தின் மேன்மையையும் கௌரவத்தையும் உயர்த்திப்பிடிக்கவும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி தேர்தலில் போட்டியிடுகின்றது.

சென்னையில் ஆர் கே நகரில் தோழர் E சடையாண்டி, மதுரை வடக்கில் தோழர் M J வால்டேர் ஆகியோர் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி சார்பாகப் போட்டியிடுகின்றனர்.

மேலும் இடதுசாரி ஒற்றுமையை வலுப்படுத்திட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ) போட்டியிடும் பத்து தொகுதிகளின் வேட்பாளர்களை ஆதரிப்பதென எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி முடிவு செய்துள்ளது.

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on:
Publication 28th April 2016

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No:TN/PMG(CCR)WPP-373/2015-17
Registered with the Registrar of
Newspapers for India No : 62018/88

# சட்டமன்றத் தேர்தல் 2016
# எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி 4 மாநிலங்களில் 251 தொகுதிகளில் போட்டி

**மேற்கு வங்கம் 191** **அஸ்ஸாம் 26**

**கேரளா 32** **தமிழ்நாடு 2**

## சென்னை ஆர் கே நகர்



E சடையாண்டி

## மதுரை வடக்கு



M J வால்டேர்

**எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி வேட்பாளர்கள்**

# SUCI (Communist)
## சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்*

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucicommunist.org